விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி. 218 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 09 திங்கட்கிழமை (25.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

### கோட்டாவைக் கைது செய்யுமாறு
## சிங்கப்பூர் சட்டமா அதிபரிடம் 63 பக்க குற்றப் புகார் சமர்ப்பிப்பு

(சிங்கப்பூர்)
இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவை போர்க் குற்றங் களுக்காக உடனடியாகக் கைது செய்யுமாறு கோரி சர்வ தேச உண்மை மற்றும் நீதித் திட்டத்தின் (ITJP) சட் டத்தரணிகள் சிங்கப் 11

## நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை

(கொழும்பு)
சர்வதேச நாணய நிதியத் துடன் முன்னெடுக்கப்படும் கலந்துரையாடல்களை மீண் டும் விரைவில் ஆரம்பிப்ப தற்கு அரசாங்கம் தீர்மானித் துள்ளது.
ஜனாதிபதியின் ஆலோ சனைக்கு அமைய நிதிய மைச்சு குறித்த நடவடிக்கை களை தற்போது ஆரம்பித்துள் ளது.
தேவையான சந் தர்ப்பங்களில் வெளி 11

### யாழ்ப்பாணத்தில்
## தனியார், இ.போ.ச பேருந்துகள் இன்று சேவையில் ஈடுபடாது

(யாழ்ப்பாணம்)
இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்.சாலை பணி யாளர்கள் இன்று திங்கட் கிழமையும் பணிப்பகிஷ் கரிப்பில் ஈடுபடுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.
இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்.சாலை ஊழி யர்கள் நேற்று ஞாயிற்றுக் கிழமை பணிப்பகிஷ்கரிப் பினை மேற்கொண்ட நிலை யில் இதுவரை தாக்குதலை நடத்திய ஊழியர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரி விக்கப்படுகிறது.
அதேவேளை 11

### பாராளுமன்றில் இவ்வாரம்
# 22ஆவது திருத்தம் சமர்ப்பிப்பு
## நீதியமைச்சர் விஜயதாஸ



(கொழும்பு) 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்தும் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் நன்மையான சரத்துக்களை உள்ளடக்கியும் உரு வாக்கப்பட்டுள்ள 22ஆவது திருத்தச் சட்டம் நாளை மறுதினம் பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்படும் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையர்களுக்கு உதவத் தயார்
### கனடா பிரதமர் அறிவிப்பு



(ஒட்டாவா)
கனடாவை இன்று வலுவான, துடிப்பான மற்றும் பல்கலாசார நாடாக மாற்றுவதற்கு பெருமள வில் பங்களித்ததற்காக தமிழ் கனேடியர்களுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம்.
தற்போதைய 11

## பாடசாலைகள் இன்று மீள ஆரம்பம்

(கொழும்பு)
எரிபொருள் தட்டுப்பாட்டை அடுத்து ஏற்பட்ட போக்கு வரத்து பிரச்சினை காரண மாக கடந்த சில வாரங்களாக விடுமுறை வழங்கப் பட்டிருந்த அரச 11

## வன்முறையற்ற ஒன்றுகூடலுக்கான உரிமை உறுதி செய்யப்படும்
### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)
அமைதியான, வன்முறை யற்ற ஒன்றுகூடலுக்கான உரிமைகளை நிலைநாட்டு வதை உறுதிசெய்வதாக ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க மீண் டும் வலியுறுத்தியுள்ளார்.
கொழும்பில் வெளிநாட்டு இராஜ தந்திரிகளுடன் இடம்பெற்ற சந் திப்பில் ஜனாதிபதி இந்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார். 11

### இடைக்கால பட்ஜெட்
## அடுத்த மாதம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)
ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க தலைமையிலான தற்போதைய நிர்வாகத்தின் 2022ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு- செலவுத் திட்டம் 12

## அரசியல் கைதிகளின் விடுதலைக்காக ஜனாதிபதியிடம் வலியுறுத்துவேன்
### பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடும்போது அரசியல் கைதிகளின் விப ரங்களை ஜனாதிபதியிடம் கொடுத்து அவர்களின் விடுதலைக்காக வலியுறுத்து வேன் என பாராளுமன்ற உறுப் பினர் விக்னேஸ்வரன் தெரி வித்தார்.
யாழில் நேற்று இடம்பெற்ற ஊடக 11

## ஜனாதிபதி தலைமையில் நாளை ஆளுங்கட்சிக் கூட்டம்

(கொழும்பு)
ஆளுங்கட்சியின் விசேட கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாளை பிற்பகல் நடைபெற வுள்ளது.
ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களு டனான கூட்டம் இடம்பெற வுள்ளது.
அவசரகாலச் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப் பித்து நிறைவேற்றும் விடயம் மற்றும் சர்வகட்சி அரசாங் கத்தை அமைப்பது குறித்தும் அங்கு 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரி வசித்த இல்லத்தில் குடியேறவுள்ள ரணில்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வசித்து வந்த, கொழும்பு பெஜட் வீதியில் உள்ள இல்லத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் சொந்த வீடு தீ வைக்கப்பட்ட பின்னர் அவர் பாதுகாப்பான ஒரு இடத்தில் வசித்து வருகிறார்.

ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகை என்பன தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதன் காரணமாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் அவற்றில் குடியேற முடியாத நிலைமை காணப்படுகிறது.

இதனால், ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால வசித்து வந்த இல்லத்தை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவு காரணமாக மைத்திரிபால சிறிசேன இந்த இல்லத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

# இலங்கைக்கான நிதி உதவியை தடுத்துநிறுத்திய ரணில்

(கொழும்பு)

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவராக பதவியில் இருந்த போது 2007 ஆம் ஆண்டில் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியுள்ளது.

இலங்கைக்கு வழங்கும் நிதி உதவிகளை கைவிடுமாறு, ஜப்பானிடம் ரணில் விக்கிரமசிங்க கேட்டிருந்தார் என விக்கிலீக்ஸ் இணையத்தளம் அம்பலப்படுத்தியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் அந்த கோரிக்கையை நிராகரித்திருந்த ஜப்பான், தலைவர்களால் இழைக்கப்படும் தவறுகளுக்காக ஸ்ரீலங்கா மக்களை தண்டிக்கக் கூடாது என ஜப்பான் பதிலளித்துள்ளதாக விக்கிலீக்ஸில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-7)

# பிரித்தானிய இராஜாங்க அமைச்சருடன் ஜனாதிபதி ரணில் கலந்துரையாடல்


(கொழும்பு)

பிரித்தானிய பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி விவகார இராஜாங்க அமைச்சர் தாரிக் அஹமட் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையில் தொலைபேசி உரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதாக தனது டுவிட்டர் தளத்தில் பிரித்தானிய இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள சவால்களுக்கு மத்தியில் இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவை வழங்க பிரித்தானியா தயாராக இருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் தாரிக் அஹமட் ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளார். (4-7)

# எரிபொருள் வரிசையில் காத்திருந்த யானை




(கண்டி)

நாட்டில் எரிபொருளுக்கான வரிசை தினமும் குறைவின்றி நாடு முழுவதும் காணப்படும் நிலையில், யானையொன்று எரிபொருளுக்காக காத்திருந்த சம்பவம் கண்டியில் பதிவாகியுள்ளது.

கதிர்காமத்தில் நடைபெறவுள்ள பெரஹெர உற்சவத்தில் கலந்துகொள்ளவுள்ள மியன் ராஜாவை ஏற்றிய லொறியே வரிசையில் காத்திருந்தது.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையிலிருந்து கதிர்காமத்தை நோக்கி புறப்படுவதற்கு முன்னர் யானையுடன் லொறி எரிபொருள் வரிசைக்குள் நுழைந்தது.

கண்டி- கட்டுகஸ்தோட்டையில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் தனது வாய்ப்பு வரும் வரை யானையும் லொறியில் காத்திருந்த சம்பவம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# குரங்கு அம்மை தொடர்பில் எச்சரிக்கையுடன் இலங்கை

## பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர்



(கொழும்பு)

இலங்கையும் குரங்கு அம்மை தொடர்பில் மிகுந்த எச்சரிக்கையுடன் உள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்நாட்டு மக்களை நோயிலிருந்து பாதுகாக்கும் முறையான வேலைத்திட்டம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

குரங்குக் காய்ச்சல் உலக சுகாதார அவசரநிலையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் இதனை அறிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையின்படி, உலகில் 75 நாடுகளில் 16,000 இற்கும் மேற்பட்டோர் குரங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்க நாடுகளில் இருந்து பெரும்பாலும் பதிவாகிய குரங்குக் காய்ச்சல் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் பதிவாகியுள்ளன.

இந்த நோயால் இதுவரை 5 பேர் உயிரிழந்துள்ளனர். (4-7)

# துணியால் சுற்றப்பட்ட நிலையில்

# வீதி ஓரத்தில் இருந்து குழந்தை ஒன்று மீட்பு

(தருமபுரம்)

அக்கரையான் முழங்காவில் வீதியில் குழந்தை ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, அக்கரையானில் இருந்து முழங்காவில் செல்லும் பிரதான வீதியில் உள்ளக வீதியில் பிறந்து இரண்டு அல்லது மூன்று நாட்களே ஆன குழந்தை ஒன்று வெள்ளைத்துணியில் சுற்றப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய நேற்று மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட குழந்தை தற்போது கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் குழந்தையின் உடல் நலம் தேறி வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரையான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-7,316)

# இலங்கையின் நிலைமை மேலும் மோசமடையும்

## ஐ.நா எச்சரிக்கை

(இலங்கை)

இலங்கையில் உள்ள மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

மில்லியன் கணக்கான மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய உணவுகளை உட்கொள்வதில்லை என்பதுடன், தற்போதைய நிலைமை மோசமடையக்கூடும் என்று ஐக்கிய நாடுகளின் நிறுவனம் எச்சரித்துள்ளது.

உலக உணவுத் திட்டம் மற்றும் ஐ.நாவின் உணவு மற்றும் விவசாய அமைப்பு ஆகியன மேற்கொண்ட பயிர் மற்றும் உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டில் 6.3 மில்லியன் இலங்கை மக்கள் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)


# பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனமொன்றுக்கு பின்வரும் உத்தியோகத்தர் தேவை.

❖ பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்கள்)

யாழ். நகரத்திலிருந்து 6 கிலோமீற்றர் தூரத்திற்குள் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

076 097 3[illegible]


# மின்சாரம் தாக்கி முதியவர் பலி

(ஏறாவூர்)

யானைக்காக அமைக்கப்பட்டிருந்த மின்சாரவேலியில் சிக்கி 69 வயதான முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுணதீவு பாவற்கொடிச்சேனை பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்தவர்களை கைது செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

கடந்த ஜூலை 9 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை ஜனாதிபதி மாளிகைக்குள் சென்றவர்களில் ஒரு தொகுதியினரைக் கைது செய்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக தென்னிலங்கைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த காலப் பகுதிக்குள் ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்தவர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சி.சி.ரி.வி கமெராக்காட்சிகளின் துணையுடன் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறு நுழைந்தவர்களில் ஒரு தொகுதியினர் ஜனாதிபதி மாளிகையின் தொன்மை வாய்ந்த பொருட்களை திருடினார்கள் மற்றும் சேதப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டுக்களின் அடிப் படையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (4)

# தாக்குதலுக்கு அஞ்சோம் மீண்டும் ஒன்றிணைவோம்

## போராட்டக்காரர்கள் சூளுரை

(கொழும்பு)

**இரவோடிரவாக நடத்தப்படும் தாக்குதல்களுக்குத் தாம் அஞ்சப்போவதில்லை என்றும், இந்தப் போராட்டத்தில் இடைவெளியோ அல்லது தடங்கலோ ஏற்பட்டாலும் தமது இலக்கை அடையும் வரை போராட்டம் தொடரும் என்றும் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.**

தீவிர பொருளாதார நெருக்கடியை அடுத்து நாட்டு மக்கள் ஒன்றிணைந்து சுமார் 100 நாட்களுக்கும் மேலாக முன்னெடுத்துவந்த தன்னெழுச்சிப் போராட்ட இடமான கொழும்பு, காலிமுகத்திடல் "கோட்டா கோ கம" கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை பெருமளவான பொலிஸார், முப்படையினர் மற்றும் விசேட அதிரடிப்படையினர் அடங்கிய குழுவினரால் சுற்றிவளைக்கப்பட்டதுடன், அங்கிருந்த போராட்டக்காரர்கள் மீதும் சட்டத்தரணிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதும் மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டு, கூடாரங்கள் அகற்றப்பட்டதுடன் ஜனாதிபதி செயலகமும் படையினரால் கைப்பற்றப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வெளியேறுவதுடன் காலிமுகத்திடல் "கோட்டா கோ கம" போராட்டக்களத்தைக் கலைப்பதற்கான உத்தியோக பூர்வ அறிவிப்பை கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வெளியிடுவதற்குப் போராட்டக்காரர்கள் ஏற்கனவே தீர்மானித்திருந்த நிலையில், நாட்டின் 8 ஆவது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவிப் பிரமாணம் மேற்கொண்டு 24 மணிநேரம் கூட முடிவடைந்திருக்காத பின்னணியில் படையினரின் இரும்புக் கரம் கொண்டு மக்களின் போராட்டம் அடக்கப்பட்டமை சர்வதேச ரீதியில் பாரிய அதிர்வலைகளைத் தோற்றுவித்திருந்தது.

இந் நிலையில் எந்த தடங்கல் ஏற்பட்டாலும் தமது போராட்டம் தொடரும் என போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். (4)

## QR கோட் பரீட்சார்ந்த நடவடிக்கை வெற்றி

### அமைச்சர் காஞ்சன

(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள 20 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கியு.ஆர் அட்டை முறைமை 4,708 வாகனங்களுக்கு வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் இதனை பதிவிட்டுள்ளார்.

மேலும், முன்பதிவு மற்றும் விநியோகத்தில் தாமதம் காரணமாக சோதனை செய்யப்படாத 5 எரிபொருள் நிலையங்களில் அடுத்த 2 நாட்களில் குறித்த முயற்சி மேற்கொள்ளப்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (4)

## தேசிய பேரவையொன்று உருவாக்கப்படும்-சஜித்

(கொழும்பு)

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண தேசிய பேரவையொன்று உருவாக்க ப்படும் என எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அனைத்து தொழிற்சங்க ங்கள், சிவில் அமைப்புகள் போன்றவற்றை ஒன்றிணை த்து நாட்டை கட்டியெழுப்புவத ற்கான எதிர்கால வேலைத் திட்டம் குறித்து திட்டவட்டமான புரிதலுக்கு வரவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரி வித்தார்.



அந்தவகையில் தேசிய பேரவை ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நிறுவப்படவுள்ளதாக சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

இதனை அடுத்து குறித்த பேரவையில் எட்டப்படும் முற்போக்கான பிரேரணைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (4)

## வழமைக்கு திரும்பவுள்ள அரச நிர்வாக செயற்பாடுகள்

(கொழும்பு)

தற்போது முடங்கிப் போயுள்ள அரச நிர்வாகத்தை வழமைக்குக் கொண்டு வரும் முயற்சிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்தியுள்ளார்.

அதன் பிரகாரம் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் அரசாங்கத்தின் நிர்வாக செயற்பாடுகள் வழ்மைக்குத் திரும்ப வேண்டும் என்று அனைத்து திணைக்களத் தலைவர்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க நிறுவனங்கள் வழமை போன்று இயங்கும் நிலையை உருவாக்கவும், பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை அளித்துச் செயற்படவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிவில் நிர்வாகத்தை பலப்படுத்தும் வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை [illegible] ரணில் [illegible] விடுத்துள்ளார். (4)


## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பிதழும்

அன்னை மடியில்

அரன் அடியில்

18 • 10 • 1944

26 • 06 • 2022



அமரர். செல்வி. விசாகரத்தினம் சின்னத்துரை

(இளைப்பாறிய உதவித் திட்டமிடல் பணிப்பாளர்)

சொல்லாலும் செயலாலும் தூய்மையாய் வாழ்ந்து
எங்கள் வாழ்வு வளம்பெற நல்வழி காட்டியவரே.
அன்புள்ளம் கொண்ட சகோதரியாக எம் கனவிலும், நனவிலும்
செயலிலும் நிற்கும் தெய்வமே
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஒரு மாத காலம் ஒரு யுகமாகக் கழிந்ததுவே
என்றென்றும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டகலாது.

கடந்த 26.06.2022 இயற்கை எய்திய எம் அன்புச் சகோதரியின் மறைவுச் செய்தி கேட்டு எமக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் தொலைபேசி, இணையம் மூலம் ஆறுதல் செய்தி கூறியவர்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் எம் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் **26.07.2022 செவ்வாய்க்கிழமை** காலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் அன்றைய தினம் முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது ஊரிக்காடு இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (சி-4657)

நெறுங்கொழு வீதி,ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை. 076 469 9643

தகவல்-குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை கிரிக்கெட் பிரிவு iii – 2022

# 11 ஆவது தகுதி காண் போட்டியில் மானிப்பாய் பரீஸ் அணி வெற்றி



இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 50 ஓவர் கொண்ட தொடரின் 11 ஆவது தகுதி காண் போட்டியில் மானிப்பாய் பரீஸ் அணி ஸ்கந்தாஸ்ரார் அணியை 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தமது இரண்டாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தாஸ்ரார் அணி 48.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றது. அஜனீதன் ஆட்டமிழக்காது 90, தணுஸ்ராஜ் - 42 ஓட்டங்களைப் பெற்றனர்.பந்துவீச்சில் மானிப்பாய் பரீஸ் அணி சார்பாக திலக் 10 ஓவர்களில் 55 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கனிஸ்கர் 10 ஓவர்களில் 30 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கிரிஷாந் 8 ஓவர்களில் 40 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் தயான் 10 ஓவர்கள் பந்து வீசி 42 ஓட்டங்க ளைக் கொடுத்து 2 விக் கெட்டுக்களையும் கைப்பற்றினர், பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் அணி 32 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றது. டிதுஸன்- 64, கிரிஷாந் ஆட்டமிழக்காது 43, நிதர்ஸன் -41, சபதீபன்- 38 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஸ்கந்தாஸ்ரார் அணியைச் சார்ந்த மயூதுஸான் 7 ஓவர்களில் 52 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தும் யாழ்.நகரில் சிறந்த களக அணித் தெரிவிற்கு (RATING) மானிப்பாய் பரீஸ் அணி 8.53 புள்ளிகளையும் ஸகந்தாஸ்ரார் அணி 2.91 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (4)

## இலங்கை கிரக்கெட் பிரிவு iii-2022

# 12 ஆவது தகுதி போட்டியில் ஜொலிஸ்ரார் அணி வெற்றி

இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 50 பந்து பரிமாற்றங்களை கொண்ட தொடரின் 12 ஆவது தகுதி காண் போட்டியில் ஜொலிஸ்ரார் அணி, ஸ்ரீகாமாட்சி அணியை 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தமது இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ காமாட்சி அணி 23.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது.

நிஜன்- 27, சாயுருதன்- 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜொலிஸ்ரார் அணியைச் சார்ந்த கோபிராம் 5.3 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் ரவீந்திரன் 8 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் ஜங்கரன் 4 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

90 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஜொலிஸ்ரார் அணி 6.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டினை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது.

சந்தோஸ் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களையும் கோமயின்தன் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் வருடாவருடம் (13 ஆண்டுகள்) நடத்தும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு (RATING) ஜொலிஸ்ரார் அணி 7.8 புள்ளிகளையும் ஸ்ரீகாமாட்சி அணி 0.99 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (4)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2671

Search for people, places and things

**கஜேந்தினி**

குழந்தைகளின் சந்தோஷம் முக்கியமென கருதும் அப்பாக்களின் மூளை அபாரமாகச் செயற்படும்.



**தயாளன்**

இதை போட்டோ எடுத்த போட்டோ கிராபர்...



தற்போதுமூக்கு உடைந்து மருத்துவமனையில் உள்ளார்...

**வர்ஷா**




பழைய சோறு கஞ்சி 250 ரூபாய்.
இததானடா நாங்க சாப்பிட்டு இருந்தோம்
அப்போ சுகர் வரும்னு சொல்லிட்டு
இப்போ ஹெல்த் டிரிங்னு
250 ரூபாய்க்கு விக்குறீங்க

**தனு**

நமக்கு இந்த டி.வி பாக்கிற பழக்கமே இல்லை. நம்ம உண்டு நம்ம போன்னுண்டுனு இருந்துறது..



**டிபிசன்**

காண்டா மிருகத்திடமிருந்து நாம என்ன கத்துக்கிட்டோம்..



என்னதான் வாக்கிங் போய் கீரை, காய்கறின்னு வெஜடேறியன் ஐட்டமா சாப்பிட்டாலும் வெயிட்டு குறையாதுன்னு...

**விது**




சுப்பர்டா செல்லக்குட்டி...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண மருத்துவமனைகளுக்கு 24 மில்.பெறுமதியான மருந்து பொருட்கள்



(நெளுக்குளம்)

24 மில்லியன் பெறுமதியான மருந்து பொருட்கள் வடமாகாணம் உட்பட யாழ். போதனா மருத்துவமனைக்கு S.K.நாதனால் சுகாதார அமைச்சின் செயலாளரிடம் நேற்று முன்தினம் மருத்துவ நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்காலத்தில் நிலவும் அரசியல் நெருக்கடி, பொருளாதார அவசரநிலை மற்றும் சமூகமட்ட நோயாளர் நல அத்தியாவசிய நிலை காரணமாக மருத்துவம் சார்ந்த பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் யாழ். போதனா மருத்துவமனையினரின் அவசர வேண்டுகோளிற்கமைய S.K.நாதன் அறக்கட்டளையின் முழுமையான நிதிப்பங்களிப்பினால் வடமாகாண மருத்துவமனைகளுக்கு அத்தியாவசியமான மருந்துப் பொருட்கள் சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்ட நன்கொடை மருந்துகள் வடமாகாண மருத்துவமனைகளுக்கு மிக விரைவில் விநியோகிக்கப்படும் என அமைச்சின் செயலாளரால் உறுதியளிக்கப்பட்டது. (4-33-299)

# அமைதிப் போராட்டத்தை வன்முறை மூலம் அடக்குவது ஆபத்தை வழிவகுக்கும்

## சமத்துவக் கட்சி

(கிளிநொச்சி)

காலிமுகத்திடல் போராட்டத்தின் விளைவாகவே நாட்டின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவானது. புதிய ஜனாதிபதி தெரிவாகி பதவியேற்க முடிந்தது.

எனவே அந்த அமைதியான போராட்டத்தை வன்முறைகள் மூலம் அடக்குவது ஆபத்தான பாதைகளைத் திறப்பதற்கே வழிவகுக்கும் என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் எம்.பியுமான சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பிலே மேற்கண்டவாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் அகிம்சை வழியில் போராட்டத்தை நடத்தி வருகின்ற காலிமுகத்திடல் இளைய சக்தி மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைத் தாக்குதல்கள் கவலைக்குரியன.

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதி நாட்டில் புரையோடிப்போயுள்ள பொருளாதார நெருக்கடிகளை தீர்ப்பதற்கும் நிலைபேறான அரசியல், பொருளாதார கொள்கைகளை கொண்டுவரவும் முயற்சிக்க வேண்டும்.

மாறாக எதிர்கால அரசியல் தலைவர்களாக வந்தாக வேண்டிய இந்த இளைஞர் மீது படைபலத்தைப் பிரயோகித்து வன்முறை தழுவிய ரீதியில் கருத்துக்களையும் செயற்பாடுகளையும் ஒடுக்குவது தவறானதும் ஆபத்தானதுமான பாதைகளைத் திறப்பதற்கே வழிவகுக்கும்.

சமத்துவமான அரசியல் முறைமையினை அடித்தளமாகக் கொண்டு சகல தரப்பினருக்குமான பொருளாதாரத்தையும் பன்மைத்துவம் மிக்க சமூக, பண்பாட்டு அம்சங்களையும் வளர்த்தெடுக்க வேண்டியது மிக அவசியமானதாகும் என தெரிவித்தார். (4)

# நுணாவில் வீரபத்திரர் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நுணாவில் மேற்கு பத்திரகாளி சமேத வீரபத்திர ஆலய வருடாந்த மஹோற்சவம் ஆனது இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை இரவு சப்பறமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் 3 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (4-6-29)

# நூல் வெளியீடு

(கிளிநொச்சி)

கலாநிதி மு.குணசிங்கம் எழுதிய "மனமே" சுயசரிதை எனும் நூல் வெளியீடு எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை புதுக்குளம் தங்கம்மா முதியோர் இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார். மாலை 4 மணிக்கு வறுமைக்கோட்டிற்குட்பட்ட சிறுவர்களுக்கான இலவச ஆடைப்பொதிகள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (4-6)


## கண்ணீர் அஞ்சலி

திருமதி.கண்மணி சிவசுப்பிரமணியம்



யாழ்.கல்வி வலயத்தில் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திருமதி. **ஸ்ரீரஞ்சனி இராமநாதன்** அவர்களின் பாசமிகு மாமியார் **திருமதி. கண்மணி சிவசுப்பிரமணியம்** அவர்கள் காலமான செய்தியறிந்து துயரடைவதுடன் அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருமதி. ஸ்ரீரஞ்சனி இராமநாதனுடன் பணியாற்றிய

யாழ்.கல்வி வலய நண்பர்கள்

(C-4658)


# காலிமுகத்திடல் தாக்குதல் வீட்டை எரித்தமைக்கான பதிலடியே என எண்ணத் தோன்றுகிறது

## பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

ரணில் விக்கிரமசிங்க புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்று 24 மணி நேரம் நிறைவடைவதற்குள் காலி முகத்திடலில் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றமையை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். அவர்கள் தாமாகவே வெளியேற ஆயத்தப்படுத்துகையில் இது நடந்தமை தன் வீட்டை எரித்தமைக்கான பதிலடியோ என்று எண்ணத் தோன்றுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

போராட்டக்காரர்கள் அரச அலுவலகங்களில் இருந்து வெளியேறுவதற்காக மென்வலு முயற்சிகளை பிரயோகிப்பதற்கு ஜனாதிபதி உத்தரவிட்டமை ஏமாற்றத்தையும் பல சந்தேகங்களையும் ஏற்படுத்துகின்றது.

முன்னைய ஜனாதிபதி இருந்த போது பிரதமராக பதவி ஏற்ற பின்னர் போராட்டம் காலிமுகத்திடலில் நடைபெறுவதை அனுமதிக்கும் வகையிலும் ஊக்குவிக்கும் வகையிலும் காலிமுகத்திடல் போராட்டம் தொடரலாம் என்றும் ரணில் அறிக்கை விட்டிருந்தார்.

ஆனால், அதே ரணில் விக்கிரமசிங்க தற்போது ஜனாதிபதியாக பதவி ஏற்ற பின்னர் பொது மக்களின் போராட்டத்தை நசுக்குவதற்கு மேற்கொண்ட இந்த வன்முறை பிரயோகம் கவலைக்கிடமானது.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி தேர்தலின் போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு நான் வாக்களித்ததன் காரணம் அவர் பொதுமக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு இந்த நாட்டின் பொருளாதார பிரச்சனைகளுக்கு தகுந்த தீர்வொன்றினை கொண்டு வந்து பொதுமக்களைப் பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்றுவார் என்ற எதிர்பார்ப்பில் தானே அன்றி, அடக்குமுறைகள் ஊடாக பொதுமக்களின் போராட்டங்களை நசுக்க வேண்டும் என்பதற்காக அல்ல என தெரிவித்தார். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 200 | 200 | 360 |
| உருளைக்கிழங்கு | 240 | 180 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 550 | 600 | 600 |
| தக்காளி | 300 | 300 | 300 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 350 | 200 |
| கோவா | 340 | 320 | 300 | 330 |
| கரட் | 250 | 400 | 370 | 380 |
| பூசணி | 160 | 300 | 200 | 240 |
| புடோல் | 160 | 120 | 140 | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 250-450 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 300 | 300 | 320 | 600 |
| வெண்டக்காய் | 100 | 150 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 240 | 280 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 | 300 |
| லீக்ஸ் | 250 | 250 | 260 | 300 |
| பீற்றூட் | 280 | 200 | 250 | 300 |
| கறிமிளகாய் | 600 | 500 | 600 | 450 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 350 | 400 |
| போஞ்சி | 400 | 450 | 430 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | — | 320 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 150 | 100 |
| தேசிக்காய் | 300 | 200 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 40-80 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 250 | 280 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 250 | 400 |
| முள்ளங்கி | 120 | 100 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 30 |
| ஈரப்பலா | 80 | 120 | — | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.போ.ச. யாழ். சாலை ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். சாலை ஊழியர்கள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பினை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திற்கு உள்ளே வெளியில் இருந்து வருகின்ற பேருந்துகள் உள்நுழையாதவாறு தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

யாழ். சாலையின் செயற்பாடுகள் முடங்கி காணப்படுவதால் வெளியூரில் இருந்து வரும் பேருந்துகள் தரித்து நின்று பயணிகளை ஏற்றும் செயற்பாடுகள் முடங்கி காணப்படுகின்றது.

இதன் காரணமாக பேருந்தில் பயணிப்பதற்காக வந்த பொதுமக்கள் பேருந்து இல்லாமல் காத்திருப்பதையும் பெரும்பாலானோர் தனியார் பேருந்துகளை பயன்படுத்துகின்றனர்

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது, கடந்த 22 ஆம் திகதி இரவு 9 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட 57 வழித்தட இ.போ.ச. பேருந்தின் சாரதி மற்றும் காப்பாளர் இருவரும் கல்கமுவ சாலை இ.போ.ச. சாலை ஊழியர்களினால் தலாதகம எனும் பகுதியில் தாக்கப்பட்டுள்ள நிலையில் இந்த தாக்குதலை நடத்திய ஊழியர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இலங்கை போக்குவ ரத்து சபையின் யாழ். சாலை ஊழியர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். (4-33)



கறுப்பு ஜுலை கலவரத்தில் 39 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் சனிக்கிழமை அல்வாய் கிழக்கில் உள்ள தமிழரசுக்கட்சி அலுவலகத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் இடம்பெற்றது. (படம்- மகாலிங்கம்)

## மணல் கொள்ளையர்களால் மந்திகை பகுதியில் விபத்து

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக மணல் ஏற்றி சென்ற வாகனம் ஒன்று இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து மற்றும் தனியார் பேருந்து ஆகியவற்றுடன் மோதி விபத்தினை ஏற்படுத்தி விட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் மந்திகை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது. சட்டவிரோதமான முறையில் மணலை ஏற்றி மிக வேகமாக வந்த ஹன்டர் ரக வாகனம் வேக கட்டுப்பாட்டினை இழந்து டீசல் பெற காத்திருந்த தனியார் பேருந்தின் மீது விபத்தினை ஏற்படுத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்று, பருத்தித்துறையில் இருந்து கொக்கிளாய் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துடனும் மோதி விபத்தினை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

குறித்த விபத்து தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6-33)

## வட்டுக்கோட்டையில் கஞ்சாவுடன் மூவர் பொலிஸாரால் கைது

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரத்தில் 32 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் 2 கிராம் கேரளக் கஞ்சாவுடன் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை அராலி மத்தி பிரதேசத்திலிருந்து 22 மற்றும் 23 வயதுடைய இரண்டு இளைஞர்கள் நேற்று சிறியளவு ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். வட்டுக்கோட்டை பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் மூவரையும் நாளை செவ்வாய்க்கிழமை அன்று மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-6- 104)

## வில்லூன்றியில் ஆடி அமாவாசை

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆடி அமாவாசை நிகழ்வு எதிர்வரும் வியாழக் கிழமை காலை விசேட பூஜைகள் இடம்பெற்று காலை 8 மணி முதல் வில்லூன்றி தீர்த்தக்கரையில் பிதிர்த்தர்ப்பணம் இடம்பெறும். (4-6)

## தென்மராட்சியில் இருவருக்கு கொரோனா தொற்று

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை எல்லைக்குட்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் மேலும் இருவர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கச்சாய் வீதி, கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 82 வயதான முதியவர் ஒருவரும், நேற்று முன்தினம் சனிக்கிழமை கச்சாய் வீதி சாவகச்சேரிப் பகுதி யைச் சேர்ந்த 67வயதான பெண் மணி ஒருவருமே இவ்வாறு புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (4-30)



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது. வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நாட்டுதல் நடைபெற்று பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களிற்கான காளாஞ்சி மாட்டுவண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந் திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன.

(படங்கள்-சிவசாந்தன்,கஜிந்தன், ரவிசாந்)

## இராசிபலன்

25.07.2022
ஆடி 09, திங்கட்கிழமை
துவாதசி மாலை 06.05 மணிவரை

மிருகசீரிடம் பின்னிரவு 3.14 மணிவரை
சுபநேரம்- 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் -7.32-9.02 மணிவரை

அமிர்தசித்தம்
சந்திராஷ்டமம்-
விசாகம்

**வளவன்**



மேஷம்

எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.



ரிஷபம்

எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.



மிதுனம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வு அவசியம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



கடகம்

வருமானம் பெருகி வளம் காணும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.



சிம்மம்

முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், ஆரோக்கியமான நாள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.



கன்னி

போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள்.



துலாம்

பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் என்பன ஏற்படலாம், ரோக பயமுண்டு.



விருச்சிகம்

உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.



தனுசு

இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், செய் தொழில் மேன்மையுண்டு.



மகரம்

செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், தாழ்ந்த சுபாவமுண்டு.



கும்பம்

உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், புண்ணிய காரியங்களில் ஆரவம் கூடும், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.



மீனம்

நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

உன் எதிர்பார்க்காத அன்பு உனக்கு எதிர்பாராத பலனைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகட்சி அரசில் இணையுமாறு அழைப்பு கிடைக்கவில்லை

## மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

"சர்வகட்சி அரசில் இணையுமாறு எமக்கு இன்னும் அழைப்பு விடுக்கப்படவில்லை. அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டால், அது குறித்து பரிசீலிக்கலாம்" என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும், தொழிற்சங்க பிரமுகர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையும் அவர் வன்மையாகக் கண்டித்தார். (4)



# மீண்டும் பணிகளை ஆரம்பிக்கும் ஜனாதிபதி செயலகம்

(கொழும்பு)

மூன்று மாதங்களுக்கும் மேலாக போராட்டக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருந்த ஜனாதிபதி செயலகம் இன்று திங்கட் கிழமை முதல் முழுமையாக இயங்கும் என உயர் அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

போராட்டக்காரர்களால் ஆக்கிரமிப்பின் போது சேதமடைந்த கதவுகள் மற்றும் ஜன்னல்களை சுத்தம் செய்தல் மற்றும் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள் ளப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

இதேவேளை, ஜனாதிபதி செயலக வளாகத்தில் இடம் பெற்ற குற்றச் செயல்களுக்கான சாட்சியங்களை சேகரிப்பதற்காக கொழும்பு மத்திய பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலின் கீழ் விசேட குற்றப் பிரிவு மற்றும் கைரேகை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ குறிப்பிட்டுள்ளார்.(4)

# இந்தியாவிற்கு இரத்தினக்கல் கடத்த முற்பட்டவர் கைது

(கொழும்பு)

கொழும்பில் இருந்து இந்தியாவுக்கு சென்றவரிடமிருந்து பெருந்தொகை இரத்தின கற்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக சென்னை செல்ல முற்பட்டவரிடமிருந்தே இவை மீட்கப்பட்டுள்ளன.

குறித்த நபரின் வயிற்றில் 56 பக்கேற்றுகளில் 1,746 இரத்தினக் கற்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. (4)

# கொரோன தடுப்பூசிகளின் காலாவதி திகதி நீடிப்பு

(கொழும்பு)

இந்த மாத இறுதியில் காலாவதியாகவிருந்த கொரோனா தடுப்பூசிகளின் காலாவதி திகதியை பைசர் நிறுவனம் நீடித்துள்ளது.

குறித்த நிறுவனம் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் தடுப்பூசிகளின் காலாவதித் திகதி 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இறக்குமதி செய்யப்பட்ட 4 வகைகளைச் சேர்ந்த 7 மில்லியனுக்கும் அதிகமான பைசர் தடுப்பூசிகளின் காலாவதிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு கூறியுள்ளது. (4)

# மேலும் ஆறு எரிவாயு கப்பல்கள் வரவுள்ளன

## லிட்ரோ அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த வாரத்தில் மேலும் ஆறு எரிவாயு கப்பல்கள் நாட்டை அடையத் திட்டமிடப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் இம்மாதத்தில் எரிவாயு இருப்பு 33,000 மெற்றிக் தொன்னாக இருப்பதோடு பொதுமக்களுக்கு தொடர்ந்து எரிவாயு விநியோகத்தை உறுதி செய்யும் வகையில் இறக்குமதியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளத்தாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. (4)


## பதவி வெற்றிடம்

தனியார் பஸ் சேவைச்சங்கம் வடமராட்சியில் கீழ் காணும் பதவிகளுக்காக விண்ணப்பம் கோரப்படுகிறது.

1. முகாமைத்துவ உதவியாளர்
2. நேரக் கணிப்பாளர்

கல்வித்தகைமை :- க.பொ.த.சாதாரண தரம்
வயதெல்லை :- 1) 30 முதல் 45
2) 25
வதிவிடம் :- வடமராட்சி பகுதிக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது.
சம்பளம் :- தொழில் திணைக்கள நடைமுறைக்கமைவாகவும் ஏனையவை நேரில் பேசிச் தீர்மானிக்கப்படும்.

குறிப்பு:-முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிப்போர் முன் அனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது. (சி-4656)



## மணிவிழா வாழ்த்து



யா/பாசையூர் சென் அன்ரனீஸ் றோ.க.ம. வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றி இன்று ஓய்வு பெறும்

திருமதி. தனசோதி பாலசுப்பிரமணியம்
(ஆரம்பக்கல்வி ஆசிரியர்)
(B.A, SLTS-I)

அவர்களது சேவையை பாராட்டுவதுடன் ஓய்வுக் காலம் சீரும் சிறப்புமாக அமைய வாழ்த்துகின்றோம்.

சேவைக்காலம்

| | |
|---|---|
| நு/சென் அன்ரனீஸ் த.வி. | 04.12.1985 – 08.02.1988 |
| யா/கோப்பாய் ஆசிரியர் கல்லூரி | 09.02.1988 – 31.12.1989 |
| நு/நானுஓயா த.வி | 01.01.1990 – 04.05.1992 |
| யா/திருக்குடும்பக் கன்னியர் மடம் | 05.05.1992 – 04.01.2004 |
| யா/பாசையூர் சென் அன்ரனீஸ் றோ.க.ம.வி | 05.01.2004 – 27.02.2015 |
| யா/சென்றோக்ஸ் த.வி | 28.02.2015 – 15.07..2016 |
| கொ/இரத்மலான இந்துக்கல்லூரி | 16.07.2016 – 18.01.2020 |
| யா/பாசையூர் சென் அன்ரனீஸ் றோ.க.ம.வி | 19.01.2020 – 20.07.2022 |

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/பாசையூர் சென் அன்ரனீஸ் றோ.க.ம.வித்தியாலயம்.
(12246)



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: சூரி 11 செவ் 12<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில் : பட்டதாரி IT முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/12811 | பிறப்பு:2002 இந்து<br>நட்சத்திரம்: பரணி 2<br>கி.பா:55 சூரி. செவ் 1 இல்<br>உயரம்:5' 5"<br>தகைமை/தொழில்: A/L Bio<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/12812 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: 22 ½ சூரி 9 செவ் 7 இல்<br>உயரம்: 180 cm<br>தகைமை/தொழில்: A/L லண்டன்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10814 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா:74 சூரி 9 செவ் 1 இல்<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: BSc உதவி திட்டமிடல் பணிப்பாளர்<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி அரச உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/12813 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 44 சூரி 12 செவ் 2 இல்<br>உயரம்:170 cm<br>தகைமை/தொழில்: BSc,Cima ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: ஆசிரியர் அல்லது A/L இற்கு மேல் படித்தவர் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12818 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: 21 சூரி 2 செவ் 11 இல்<br>தகைமை/தொழில் BSc, Bed ஆசிரியர் (கனடா)<br>எதிர்பார்ப்பு: கனடாவில் பட்டம் பெற்று அங்கு வேலை செய்பவராக இருக்க வேண்டும்<br>தொ.இ:G/12815 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம் : உத்திரட்டாதி 4<br>கி.பா: சூரி 12 செவ் 9 இல்<br>உயரம்:175 cm<br>தகைமை/தொழில்:நகைத்தொழில்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: B/12820 | பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>கி.பா :49 சூரி 1 செவ் 2 இல்<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்:BA பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: உள்நாடாயின் உயர் பதவி வெளிநாடாயின் ஐரோப்பா நாடுகள்<br>தொ.இ:G/12817 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



### மாப்பிள்ளை யாரோ?

மலையூரில் மருதப்பர் என்ற விவசாயி இருந்தார். அவர் பெரும் பணக்காரர் அல்ல. எல்லோருக்கும் உதவி நன்மைகளைச் செய்து வந்ததால் அவ்வூர் பணக்காரர்களை விட அவருக்குத்தான் புகழ் அதிகமாக இருந்தது. எல்லோரும் மிகுந்த மரியாதை செலுத்தி வந்தார்கள்.

ஒருமுறை மருதப்பர் தம் ஊரிலிருந்து அடுத்துள்ள நகரத்திற்குச் செல்ல வேண்டி இருந்தது. போகும் வழியில் ஒரு ஆறு இருந்தது. அதில் வெள்ளம் வந்து விட்டால் கடக்க முடியாது. சுற்றுப்பாதையில் ஐந்து மைல் தூரத்திலுள்ள பாலம் வழியாகத்தான் போய் வர வேண்டும்.

மருதப்பர் நகருக்குப் போன போது ஆற்றில் அதிக நீர் இருக்கவில்லை. அதனால் எளிதில் கடந்து நகருக்குச் சென்று விட்டார்.

ஆனால் திரும்பும் போது சுற்று வழியாகத்தான் வரவேண்டியதாயிற்று. எனவே அவர் தம் ஊருக்குப் போக ஒரு வாடகை வண்டி பேசலானார். வண்டிக்காரனும் அவர் சொன்ன வாடகைக்கு வரத் தயாரானார்.

அப்போது ஐம்பது வயது மதிக்கத்தக்க வரும் விலையுயர்ந்த ஆடைகளும் அணிந்த ஒருவர் வந்து என்ன முருகா மலையூர் போக வேண்டும் வருகிறாயா? என்று கேட்டார். வண்டிக்கார முருகனும் இவர் மலையூர் போக வண்டி பேசி விட்டார். தாங்கள் இவருடன் வண்டியில் போகச் சம்மதித்தால் ஏறிக்கொள்ளலாம் என்றான். மருதப்பரும் "வாருங்கள் எனக்கும் பேச்சுத்துணை ஆயிற்று" என்று கூறி அவரை வண்டியில் ஏறிக் கொள்ளச் சொன்னார்?

அந்தப் பணக்காரரும் "மலையூருக்கு நான் கல்யாணம் பேசப் போய்க்கொண்டிருக்கிறேன். என் பெயர் மாணிக்கவாசகம். இவ்வூரில் எனக்கு பெரிய கடை இருக்கிறது. வியாபாரமும் நன்றாக நடக்கிறது. உங்கள் ஊரில் சிவசங்கரன் என்ற பெரிய பணக்காரர் இருக்கிறாராமே. அவர் மகனை என் மகளுக்கு மணம் செய்து வைக்கலாம் என்ற நோக்கத்தோடு உங்கள் ஊருக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். அவர் எப்படிப்பட்டவர்?" என்று கேட்டார். அதற்கு மருதப்பரும் "ஐயா! கல்யாண விடயத்தில் பிறர் சொல்வதைக் கேளாமல் நேரில் போய்ப் பார்த்து விவரம் தெரிந்து கொள்வதே நல்லது. நான் எதுவும் சொல்லக் கூடாது. ஏனென்றால் எனக்கும் விவாக வயதில் ஒரு மகன் இருக்கிறான் நீங்கள் சிவசங்கரனோடு பேசி ஒரு வேளை திருமணம் நிச்சயிக்கப்படாமல் போனால் இந்த மருதப்பன் சொல்லித்தான் நின்று விட்டது என்று அவர் அவர் நினைத்தால் என்ன ஆவது" என்றார்.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## முத்துமணி மாலை செய்த லீலை

16



அந்த வீதியின் நடுவில் பெரிய கூட்டம் கூடியிருந்தது. அது கோவலனின் கவனத்தைக் கவர்ந்தது.

கூட்டத்தில் இருந்தவர்கள் அத்தனை பேரும் இளைஞர்கள். அதுவும் புகார் நகரின் பெரும் பணக்காரர்கள் வீட்டுப் பிள்ளைகள்.

அந்த வீதியே பெரும் செல்வந்தர்கள் வீட்டு இளைஞர்கள் நடமாடும் வீதி. அங்கே விற்கப்படுகிற பொருட்கள் எல்லாமே அழகுக்கும் ஆடம்பரத்துக்கும் பயன்படுபவை.

சாதாரண மக்களுக்குத் தேவையில்லாத, அதனாலேயே அநியாயத்துக்கு விலை அதிகமாக இருக்கும் பொருட்கள். கொஞ்சம் நெருங்கிப் போனபோது கூட்டத்தின் மையத்தில் ஒரு பெண் நின்றிருப்பது தெரிந்தது கோவலனுக்கு. அவள் தன் கையில் எதையோ உயர்த்திப் பிடித்திருந்தாள்.

அது ஒரு மாலை, முத்துமாலை. அந்த மாலை தங்கக் கம்பியில் இரட்டைச் சரமாகக் கோர்க்கப்பட்டிருந்தது. அவ்வளவும் மிக உயர்ந்த நல் முத்துக்கள். மாலையின் கீழ்ப் பாகத்தில் இருந்த பதக்கமும் சாதாரணமானது அல்ல.

அரச குடும்பங்களில் உபயோகிக்கப்படும் நகைகளில் மட்டுமே தென்படுகிற நேர்த்தியான தங்கப் பதக்கம். அந்த மாலையைக் காட்டிலும், வேறொரு விடயம்தான் கோவலன் கவனத்தை அதிகம் ஈர்த்தது. அந்தப் பெண் சொன்ன வார்த்தைகள் 'உயர்ந்த முத்துக்களால் நேர்த்தியாகச் செய்யப்பட்ட இந்த மாலையின் விலை ஆயிரத்து எட்டு பொற்காசுகள். அத்தனை விலை கொடுத்து இதை வாங்குகிறவர்களுக்கு இதைக் காட்டிலும் அழகான இன்னொரு பரிசு உண்டு.

'அது என்னம்மா அப்படி ஒரு பரிசு?'

'இந்த மாலையை விட அதிக எழில் படைத்த பேரழகி ஒருத்தி இருக்கிறாள். அவள் பெயர் மாதவி.

இந்த மாலையை வாங்குகிறவர்கள் அவளையும் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளலாம்.!' அந்தக் கூட்டத்திலிருந்த இளைஞர்கள் பலருக்கு மாதவியைத் தெரியும். மாதவி என்கிற பெயரை உச்சரிப்பதே அவர்களுக்கு போதை தருவதாக இருந்தது.

மாதவியால் அவர்களுக்கு உறக்கமில்லாத இரவுகள். பசியில்லாத பகல்கள். அவர்கள் எப்படியாவது அந்த மாலையை வாங்கிவிட வேண்டும் என்று துடிப்பது அவர்கள் பார்வையில் தெரிந்தது.

மாதவியைத் தெரியாதவர்கள் அந்த மாலையின் நேர்த்தியைக் கொண்டு அவளைப் பலவேறுவிதமாக மனத்துக்குள் உருவகப்படுத்திப் பார்த்தார்கள்.

ஆனால் அவர்கள் யாராலும் அந்த மாலையை வாங்க முடியாது. பணக்கார வீட்டுப் பிள்ளைகளாகவே இருந்தாலும் ஒரு மாலைக்கு இவ்வளவு செல்வம் கொடுக்கும் தகுதி அவர்களுக்கு இல்லை. எல்லோர் கண்களிலும் இயலாமையின் ஏமாற்றம் தெரிந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த இலட்சியத்தை அடைய பல காதங்கள் பயணம் செல்ல வேண்டும்.

– கார்லைல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழர் தாயகம் புறநடை என நினைத்துவிடாதீர்கள்

பசி வந்திடப் பத்தும் பறந்திடும் என்றார் நம் ஔவைப்பாட்டி.

மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை, தேனின் கசி வந்த சொல்லியர் மேல் காமுறுதல் ஆய பத்து விடயங்களைக் குறிப்பிட்டு இந்தப் பத்தும் பசி வந்திடப் பறந்திடும் என்று மிகத் தெளிவாக எடுத்துரைத்தார் நம் வயதான ஔவைப்பாட்டி.

ஆக, பசிக்கு முன்னால் எதுவும் நின்று பிடிக்க முடியாதென்பதுதான் இதன் பொருள்.

உண்மை. வறுமையும் பஞ்சமும் பசியும் மனித குலத்தை பற்றிக் கொள்ளுமாயின், அதன்பின்பு உரிமையும் ஆட்சியும் சட்டமும் சமயமும் மக்களை விட்டு விலகிப் போகும்.

ஆக, பஞ்சம் பசியினின்றும் மக்களைப் பாதுகாப்பது அவரவர் கடமையாகும்.

இந்த நாட்டில் அண்மைக்காலமாக அரசியல் புலத்தில் ஏற்பட்டுள்ள பெரும் மாற்றங்களுக்கும் குழப்பங்களுக்கும் பின்னணியாக அமைந்தது தென்பகுதி மக்களை வறுத்தெடுத்த பொருளாதார நெருக்கடியாகும்.

பொருளாதார நெருக்கடி தலைவிரித்தாடியபோது, அதற்குக் காரணமான ஆட்சியாளர்களைக் கழுத்தில் பிடித்து வெளியில் தள்ளிவிடுவதற்கு மக்கள் திரண்டெழுந்தனர்.

அதன் வேகம் ஜனாதிபதி மாளிகையை முட்டி மோதியது.

பிரதமரும் ஜனாதிபதியும் தத்தம் பதவிகளைத் துறந்தனர்.

எனவே நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடுகையில் ஆட்சி அதிகாரத்தில் ஓர் அரசு இருக்க வேண்டும் என்பதை மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பது இதனூடு தெளிவாகிறது.

அதாவது யார் ஆட்சியில் இருந்தாலும் நாட்டின் பொருளாதார நிலைமை ஓரளவுக்கேனும் நிதானமாக இருக்க வேண்டும்.

இதனைவிடுத்து வார்த்தைஜாலங்களால் மக்களின் பசியைப் போக்க முடியும் என யார் நினைத்தாலும் அதன் பின்விளைவு விபரீதமாகவே அமையும்.

இந்த நிலைமை தென்பகுதிக்கு மட்டுமே உரித்துடையதென்றும் நாங்கள் அதனின்றும் புறநடையானவர்கள் என்றும் கருதப்படுமாயின், அதன் விளைவு எங்கள் இனம் மீதான பற்றும் இனத்தின் உரிமை பற்றிய சிந்தனைகளும் நம் மக்கள் மனங்களைத் தாண்டிச் சென்றுவிடும்.

எனவே நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினின்றும் எமது மக்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான அத்தனை நடவடிக்கைகளையும் தமிழ்ப் புத்திஜீவிகளும் தமிழ் அரசியல்வாதிகளும் எடுத்தாக வேண்டும்.

இல்லையேல் தெற்கின் நிலைமை வடக்கு கிழக்கு உள்ளிட்ட தமிழர் தாயகத்திலும் ஏதோவொரு வகையில் வெளிப்படும் என்பது நிறுதிட்டமான உண்மை.

## எரிபொருள் நிரப்பு நிலையத்தில் குழப்பம் விளைவித்த 7 பேர் கைது

(குருமன்காடு)

வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை முதல் நேற்று அதிகாலை வரை எரிபொருள் விநியோகம் இடம்பெற்றது.

இந்நிலையில், எரிபொருள் பெறுவதற்கு செல்லுமிடத்தில் வாகனங்கள் கூடியமையால் வரிசையில் நின்றோருக்கும், ஏனையவர்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டு அமைதியின்மை நிலவியது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த நெளுக்குளம் பொலிஸார் அமைதியின்மை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 7 பேரைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (4,7,250)

## துவிச்சக்கரவண்டிகளில் செல்வோர் சாலை விதிகளை பின்பற்றுங்கள்

(குருமன்காடு)

நாடளாவிய ரீதியில் எரிபொருள் பிரச்சினை காரணமாக துவிச்சக்கர வண்டிகளின் பாவனைகள் வெகுவாக அதிகரித்துள்ள நிலையில் வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவுக்கான பொறுப்பதிகாரி ரோஷன் சந்திரசேகர முக்கிய அறிவித்தல் ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களில் மாத்திரம் துவிச்சக்கரவண்டிகளினால் 15க்கு மேற்பட்ட விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் சிலர் படுகாயமும் அடைந்துள்ளனர்.

இவற்றில் இரவு நேரங்களில் பெரும்பாலான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் விபத்துக்களுக்கு காரணமாக அமைந்துள்ளமை வெளிச்சமின்றி பயணிக்கும் துவிச்சக்கரவண்டிகளே ஆகும்.

எனவே வவுனியா மாவட்டத்தில் துவிச்சக்கர வண்டிகளில் செல்வோர் டைனமோ பொருத்திய லைட்களை பொருத்தியிருக்க வேண்டும் என்பதுடன் துவிச்சக்கரவண்டிகளில் பயணிப்பவர்கள் சாலை விதிகளை இறுக்கமாக கடைப்பிடிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (4,7,250)

## மேலும் 56 பேருக்கு கொரோனாத் தொற்று

கொரோனா தொற்று உறுதியான மேலும் 56 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 664,900ஆக அதிகரித்துள்ளது. (4,7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை 26 ஆம் திகதி காலை 8.00 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ் பிரதேசத்தில்** சுழிபுரம், கள்ளவேம்படி, [illegible], தொல்புரம், சத்தியகாடு, தொல்புரம் வளக்கம்பறை அம்மன் கோவிலடி ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** மாந்தை சந்தி (திருக்கேதீஸ்வரம் கிராமம்), நாகத்தாழ்வு, திருக்கேதீஸ்வரம், திருக்கேதீஸ்வரம் மருத்துவமனை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், மகாறம்பைக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## நாட்டைவிட்டு வெளியேற ஒரு இலட்சம் பேர் தயார்

நடப்பு ஆண்டில் இலங்கையில் வெளிநாட்டு வேலைகளுக்காக பதிவு செய்தவர்களின் எண்ணிக்கையை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் கூற்றுப்படி, ஜூலை மாதம் 23 ஆம் திகதி வரையான நிலைவரப்படி, 1 லட்சத்து 66 ஆயிரத்து 719 நபர்கள் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்துள்ளனர். (4,7)

## அரச ஊழியர்களை கடமைக்கு அழைப்பதில் தொடர்ந்து மட்டுப்பாடு

(கொழும்பு)

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அரச அலுவலகங்களுக்கு பணியாளர்களை அழைப்பதை மட்டுப்படுத்தும் உத்தரவு மேலும் ஒரு மாதத்திற்கு அமுலில் இருக்கும் என பொது நிர்வாகம் மற்றும் உள்விவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சேவைக்கு சமுகமளிக்கும் போது அரசாங்க அதிகாரிகள் எதிர்நோக்கும் சிரமங்களை கவனத்தில் கொண்டு நிவாரணம் வழங்குவதற்காக அமைச்சின் செயலாளர் எம். எம். பி. கே. மாயாதுன்னவினால் இது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதனை, தவறாகப் பயன்படுத்தி கடமைக்கு சமுகமளிக்கக்கூடிய அதிகாரிகள், கடமைக்கு சமுகமளிக்காத நிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4,7)

### எரிபொருளைப் பதுக்கிய

## நிரப்பு நிலைய உரிமையாளருக்கு மூன்று மாதகால சிறைத் தண்டனை

(கொழும்பு)

நுகர்வோருக்கு எரிபொருளை வழங்காது எரிபொருளைப் பதுக்கி, அதனை அதிக விலைக்கு விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொண்ட அநுராதபுரத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளருக்கு மூன்று மாத காலம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் மேலதிக நீதவான் ருத்ரிகாடி சில்வா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த பிரதிவாதியான எரிபொருள் நிரப்பு உரிமையாளருக்கு 10,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன், மீண்டும் இவ்வாறானதொரு குற்றம் இழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் பிரதிவாதிக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என நீதவான் எச்சரித்தார்.

7,000 லீற்றர் டீசலை தம்வசம் வைத்து அதனை அதிக விலைக்கு விற்பனை செய்ய முயற்சித்ததாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. (4,7)

## கேப்பாபிலவில் உள்ள வீட்டினுள் திடீரென வந்த துப்பாக்கி ரவைகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கேப்பாபிலவு பகுதியில் உள்ள ஒருவரின் வீட்டிற்குள் நேற்று காலை சமையல் அறையில் உள்ள பாத்திரம் ஒன்றில் பொலித்தீன் பொதி ஒன்று காணப்பட்டுள்ளது:

உணவுப்பொதியாக இருக்கும் என நினைத்து வீட்டு உரிமையாளர் அதனை எடுத்துப் பார்த்தபோது அதற்குள் துப்பாக்கி ரவைகள் காணப்பட்டுள்ளன.

அனைத்[illegible] துப்பாக்கி ரவைகளாக காணப்படுவதுடன் இதனை யார் கொண்டு வந்து வைத்திருப்பார்கள் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து சம்பவம் தொடர்பில் அச்சமடைந்த குடும்பத்தினர் முள்ளியவளை பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளார்கள்.

இந்நிலையில் குறித்த பகுதிக்கு வருகை தந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 35

19-21 ஒகஸ்ட் 1991 சோவியத் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிக்குப் பிறகு க்ராவ்சுக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகினார். ஓகஸ்ட் 24 அன்று உக்ரைனின் சுதந்திரப் பிரகடனச் சட்டத்தை வெர்கோவ்னா ராடா நிறைவேற்றிய பிறகு, உக்ரைனின் ஜனாதிபதி பதவியை உருவாக்க அரசியலமைப்பு திருத்தப்பட்டது. உக்ரைனின் சுதந்திரப் பிரகடனத்திற்கான வாக்கெடுப்புக்கு முன்னர், உக்ரைனிய சுதந்திரத்திற்கான எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளை ஏற்க கம்யூனிஸ்டுகளின் பாராளுமன்ற பெரும்பான்மையை வற்புறுத்துவதில் க்ராவ்சுக் முக்கிய பங்கு வகித்தார்.



லியோனிட் கிராவ்சுக்
உக்ரேனிய முதலாவது ஜனாதிபதி

அதே நாளில், வாக்காளர்கள் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து செல்வதற்கு பெருமளவில் வாக்களித்தனர் - இந்த நடவடிக்கையை க்ராவ்சுக் இப்போது முழுமையாக ஆத ரித்தார். இது சுதந்திர உக்ரைனின் முதல் அரச தலைவராக க்ராவ்சுக்கை ஆக்கியது.

**சுதந்திரப் பிரகடனச் சட்டத்தைத் தொடர்ந்து, க்ராவ்சுக் ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பெற்றார், இதன் மூலம் நடைமுறை மற்றும் நீதித்துறை அரச தலைவராக ஆனார் அந்த ஆண்டின் பிற்பகுதியில், டிசெம்பர் 5, 1991 அன்று, உக்ரைனின் முதல் ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்கள் அவரை முறையாக ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தனர்.**

**வியாசெஸ்லாவ் சோர்னோவில்**

வியாசெஸ்லாவ் சோர்னோவில் ஒரு உக்ரைனிய அரசியல்வாதி. உக்ரைனிய தேசியவாதியான இவர் சோவியத் யூனியனில் ஒரு முக்கிய எதிர்ப்பாளராக இருந்தார், அவர் 1960கள் மற்றும் 1970 களில் அவரது அரசியல் நடவடிக் கைகளுக்காக பலமுறை கைது செய்யப்பட்டார்.

1992 முதல் சோர்னோவில் உக்ரைனின் மக்கள் இயக்கமான ருக்கின் தலைவர்க்ளில் ஒருவராகவும், சாஸ்-டைம் (சாஸ்) செய்தித்தாளின் தலைமை ஆசிரியராகவும் (1995 முதல்) இருந்தார்.

1980கள்-1990களின் மிக முக்கியமான அரசியல் பிரமுகர்களில் ஒருவரான சோர்னோவில், சமகால உக்ரைன் அதன் சுதந்திரத்தை மீண்டும் பெற வழி வகுத்தார். இவர் ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாமிடம் பெற்றிருந்தார்.



வியாசெஸ்லாவ் சோர்னோவில்

**சுதந்திரத்திற்குப் பிந்தைய பிரச்சினைகள்**

சமூக மற்றும் அரசியல் மாற்றங்கள் உக்ரைனை ஒரு முழு ஐரோப்பிய நாடாக மாற்றும் திறனைக் குறைத்தன.

ஆயினும்கூட, இந்த காலகட்டத்தில் உக்ரைன் சில முக்கியமான இலாபங்களை பதிவு செய்தது. அது தனது சுதந்திரத்தை ஒருங்கிணைத்து, அதன் அரச கட்டமைப்பை வளர்த்து, அண்டை நாடுகளுடன் உறவுகளை முறைப்படுத்தியது (சில சர்ச்சைக்குரிய சிக்கல்கள் இருந்த போதிலும்), ஜனநாயகமயமாக்கல் செயற்பாட்டில் சில முக்கியமான படிகளைச் செய்து, சர்வதேச சமூகத்தின் நல்ல நிலையில் ஒரு உறுப்பினராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டது.

**சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து, உக்ரைன் பொருளாதார செழிப்பு மற்றும் ஒட்டு மொத்த ஐரோப்பாவுடன் ஒருங்கிணைக்க சிறந்த வாய்ப்பைக் கொண்டிருந்தது. ஆனால் 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில், உக்ரைனியப் பொரு ளாதாரம் மோச மாகப் பின்னடைவைச் சந்தித்தது.**

**நாட்டை ஸ்திரப்படுத்தல் மற்றும் இராஜதந்திரம்**

ஜனாதிபதி க்ராவ்சுக்கின் உடனடி முன்னுரிமை நாட்டைக் கட்டியெழுப்புவதாகும். அவரது மேலாண்மையின் கீழ், உக்ரைன் விரைவாக அதன் ஆயுதப் படைகளையும் ஒரு சுதந்திர அரசின் உள்கட்டமைப்பையும் நிறுவியது.

(தொடரும்)

# டலஸ் அழகப்பெரும தலைமையில் புதிய அரசியல் கூட்டணி?

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையில் புதிய அரசியல் கூட்டணியை உருவாக்க பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர்கள் அவதானம் செலுத்தியுள்ளனர்.

கூட்டணியாக சர்வகட்சி அரசாங்கத்தில் ஒன்றிணைவது குறித்தும் ஆலோசனைகளை முன்னெடுத்து வருவதாக லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

நிகழ்கால அரசியல் நிலவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகை யில், ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க பேச்சளவில் மாத்தி ரமே ஜனநாயகவாதி, அதிகா ரத்தில் இல்லாத போது ஜனநாயகம் பற்றி பெருமிதமாக கருத்துரைப்பவர், அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் ஜனநாயகத்திற்கு எதிராகவே அவர் செயற்படுவார் என்பதற்கு காலிமுகத்திடல் போராட்டகாரர்கள் மீது மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல் சான்றாக உள்ளது.

பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைந்து சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்காவிடின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கமே தோற்றம் பெறும். அதனை தொடர்ந்து மக்களின்போரட்டமும்தீவிரமடையும் எனத் தெரிவித்தார். (4)

# பொலிஸாரை தாக்கியவர் துப்பாக்கிச் சூட்டில் பலி

(கொழும்பு)

அம்பலாங்கொட - மனஹேன, தலகஸ்பே பிரதேசத்தில் முறைப்பாடு தொடர்பில் விசாரணை நடத்தச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை கூரிய ஆயுதத்தினால் தாக்கிய சந்தேகநபர் ஒருவர், பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் பலியாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் பிற்பகல் குறித்த கான்ஸ்டபிள் முறைப்பாட்டை விசாரிக்க அப்பகுதிக்கு சென்றுள்ளார்.

அதன்போது, சந்தேகநபரினால் அவர் தாக்கப்பட்டுள்ள நிலையில், தாக்குதலில் வெட்டுக்காயங்களுக்கு உள்ளான பொலிஸ் உத்தியோகத்தரை அங்கிருந்து அப்புறப்படுத்த அயலவர்கள் நடவடிக்கை எடுத்ததுடன் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

அதனையடுத்து, பிட்டிகல பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் குழுக்கள் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர். அதன்போது, குறித்த சந்தேக நபர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீதும் தாக்குதல் நடத்த முற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, பொலிஸ் அதிகாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் சந்தேகநபர் உயிரிழந்தார். (4)

# முகக்கவசம் அணிவதை கட்டாயமாக்க வேண்டும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

புதிய பிறழ்வுடன் கூடிய கொவிட்-19 நோய் மீண்டும் தலைதூக்கி இருக்கின்றது. அதனால்முகக்கவசம்அணிவது தொடர்பாக சுகாதார அமைச்சு இதற்கு முன்னர் எடுத்த தீர்மானத்தை மீள் பரிசீலிக்க வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கத்தின் இயக்குநர் மருத்துவர் ஹரித்த அழுத்கே தெரிவித்தார்.

கொவிட்-19 வைரஸ் புதிய வடிவில் மீண்டும் பரவி வருவது தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

உலகில் அதிகமான நாடுகள் கொவிட்-19 தொடர்பாக முறையான தீர்மானங்களை எடுத்துவரும் நிலையில் இலங்கையில் இதுவரை இது தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் இருக்கின்றது. அத்துடன் தற்போது செயலிழந்திருக்கும் கொவிட் தொடர்பான தொழில் நுட்ப குழுவை மீண்டும் கூட்டி எதிர்காலத்தில் இடம்பெறும் அழிவுகளை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பீ.ஏ.5 என்ற புதிய கொரோனா பிறழ்வு உலகம் பூராகவும் பரவி நோயாளர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 30 வீதம் அதிகரித்திருக்கின்றது. மிகவும் விரைவாக பரவும் இந்த புதியவகை பிறழ்வு இலங்கைக்கு வந்திருக்கின்றதா? எனத் தேடிப்பார்க்க இதுவரை எந்த வேலைத் திட்டமும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த தினங்களில் பரவிவரும் வைரஸ் காய்ச்சல் நோயாளர்கள் மத்தியில் புதிய கொரோனா நோயாளர்கள் இருக்கலாம் என மக்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என தெரிவித்தார். (4)

# ரணில் வெற்றியை கொண்டாடிய நாமல்

(கொழும்பு)

கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க 134 வாக்குகளுடன் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிலையில், அன்று இரவு நாமல் ராஜபக்ஷவின் வீட்டில் மாபெரும் இராப்போசன விருந்து நடைபெற்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் இந்த விருந்துபசாரத்தில் மொட்டு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நாமல் ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருந்தார்.

அன்றைய இராப்போசன விருந்தில் 137 எம்.பி.க்கள் கலந்து கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாணய நிதியத்...

விவகார அமைச்சின் உதவியை பெற்றுக் கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (4-7)

## வன்முறையற்ற...

சட்டவிரோதமான முறையில் ஜனாதிபதி செயலகத்தை ஆக்கிரமித்துள்ள ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்றுவது தொடர்பில் இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்கும் வகையில் இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் 21ஆவது சரத்தும் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமைகளை வழங்கும் இலங்கை அரசியலமைப்பின் 14 (1) (ஆ) உறுப்புரையும் அரசாங்கத்தால் பின்பற்றப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

விகாரமஹாதேவி பூங்காவில் திறந்த வெளி அரங்கு, புதிய நகர மண்டபம், ஹைட் பார்க் மற்றும் கெம்பல் பார்க் போன்ற இடங்கள் அமைதிப் போராட்டங்களுக்காக ஒதுக்கப்படும்.

"கோட்டா கோ கம" போராட்டத்தளம் தொடர்பான கவலைகளை நிவர்த்தி செய்யும்போது, தவறான சமூக ஊடக அறிக்கைகளுக்கு மாறாக, பாதுகாப்புப் படையினரால் அது அகற்றப்படவில்லை என்று விளக்கப்பட்டது.

மேலும், பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அனைவரையும் கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவது உட்பட பின்பற்றப்படும் சட்ட வழிகள் குறித்தும், சட்டமா அதிபரால் இதன்போது விளக்கமளிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (4-7)

## ஜனாதிபதி...

கலந்துரையாடப்படும் என்றும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவசரகால சட்ட வர்த்தமானி அறிவித்தலை சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்காக எதிர்வரும் புதன்கிழமை பாராளுமன்றம் கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## தனியார்...

எரிபொருள் பெறுவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக யாழ்ப்பாண மாவட்ட தனியார் பேருந்துகள் உள்ளூர் மற்றும் வெளியூரில் இன்று திங்கட்கிழமை சேவையில் ஈடுபடாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

சேவையில் ஈடுபட எரிபொருள் இல்லாததால் முழு தனியார் போக்குவரத்தும் ஸ்தம்பிதமடையும். தூரப் பேருந்து சேவையும் இடம்பெறாது. பொதுமக்கள் இதனை ஏற்றுக் கொள்ள வேண்டுமென யாழ்.மாவட்ட பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தின் தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்தார். (4-7,33)

## பாடசாலைகள்...

மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் செயற்பாடுகள் முன்னர் அறிவித்த வகையில், இன்று மீண்டும் ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் 2022ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முதலாம் தவணை பரீட்சை இடம்பெறமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய திங்கள், செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் மாத்திரம் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறும் என கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை விடுத்து அறிவித்துள்ளது.

புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாணவர்கள் வீட்டிலிருந்து கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளது. (4-7)

## இலங்கையர்...

பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு உதவ கனடா தயாராக உள்ளது என கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ருடோ தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கும் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் சட்டத்தின் ஆட்சியை பேணுவதற்கும் இலங்கை அரசாங்கத்தையும் இலங்கை பாராளுமன்றத்தால் அண்மையில் தெரிவு செய்யப்பட்ட புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவையும் கனடா வலுவாக ஊக்குவிக்கிறது.

இந்த இக்கட்டான காலங்களில் போராட்டக்காரர்களின் உரிமைகள் மற்றும் பத்திரிகை சுதந்திரம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் கனடா மீண்டும் வலியுறுத்துகிறது என மேலும் தெரிவித்தார். (4-7)

## அரசியல் கைதி...

சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர் என்னை சந்தித்து, தமிழ் அரசியல் கைதிகளின் விபரங்களை எனக்கு தந்துள்ளனர். இது எமக்கு முக்கியமானது. ஏனென்றால் அரசுக்கு நாம் விடும் கோரிக்கைகளில், கைதிகளின் விடுதலை முக்கியமானது. அவர்களின் விடுதலை மற்றும் புனர்வாழ்வு எமக்கு முக்கியமானது. இது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளோம்.

இது தவிர தமிழ்மக்களின் கோரிக்கை என்ற தலைப்பில், 6 கட்சிகள் தயாரித்த ஆவணம் ஒன்றை ஏற்கெனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளேன். அதிலே சமஷ்டி அரசியல் யாப்பு ஒன்றை தர வேண்டும் என்று நாம் கூறியிருந்தோம்.

அதை அவர் நிறைவேற்றுவார் என்ற வெளிப்பாடு எனக்கு தெரியவில்லை.

இதன் மூலம் நான் நினைப்பது என்னவென்றால், வடக்கு - கிழக்கு மாகாணங்களை சுயாட்சி மூலம் நிர்வகிப்பது தொடர்பில் ரணில் சற்று சிந்திப்பதாக எனக்கு தோன்றுகிறது.

இது தவிர காணி அபகரிப்பு விடயங்கள், சிறைக்கைதி விடயங்கள் ஆகியவற்றை படிப்படியாக செய்வதாக தெரிவித்துள்ளார் என மேலும் தெரிவித்தார். (4-7)

## சிங்...

பூர் சட்டமா அதிபரிடம் குற்றப் புகார் ஒன்றை சமர்ப்பித்துள்ளனர்.

2009ஆம் ஆண்டு உள்நாட்டுப் போரின் போது கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்த போது ஜெனிவா ஒப்பந்தங்களை கடுமையாக மீறினார் என்றும், இவை சிங்கப் [illegible] அதிகார வரம்பிற்கு உட்பட்ட உள்நாட்டு வழக்குகளுக்கு உட்பட்ட குற்றங்கள் என்றும் 63 பக்க புகார் வாதிடுகிறது.

இலங்கையில் உள்நாட்டுப் போரின் போது ஜெனிவா உடன்படிக்கைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேச குற்றவியல் சட்டங்களை கோட்டாபய ராஜபக்ஷ கடுமையாக மீறியதாக சட்டபூர்வ புகார் வாதிடுகிறது.

கொலை, மரணதண்டனை, சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற சிகிச்சை, கற்பழிப்பு மற்றும் பிற பாலியல் வன்முறைகள், சுதந்திரத்தை பறித்தல், கடுமையான உடல் மற்றும் மனநல பாதிப்பு மற்றும் பட்டினி ஆகியவை இதில் அடங்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

தன நிதானய
திகதி - 2022.07.24
சீட்டிழுப்பு இலக்கம் - 856
S 07 42 54 69

மஹஜன சம்பத
திகதி 2022/07/24
சீட்டிழுப்பு இலக்கம் 4826
P 2 5 9 6 4 5

ஹந்தஹன HANDAHANA
திகதி 2022.07.24
சீட்டிழுப்பு இலக்கம் 135
கும்பம் 20 33 35 37 கும்பம்

மெகா பவர்
திகதி 24/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1174
Z 13 10 17 24 61

கொவிசெத
திகதி 2022.07.24
சீட்டிழுப்பு இலக்கம் 3068
P 17 34 59 61

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 24/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1304
கன்னி 4 6 0 2 1 7

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1801
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.07.24
தினம் ஞாயிற்றுக்கிழமை
F 35 51 52 63
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,622,800/-

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.07.24
சீட்டிழுப்பு இல : 3962
ரூ. 2,288,080/-
22 52 62 66 P

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 200
சீட்டிழுப்பு திகதி 2022.07.24
ஞாயிற்றுக்கிழமை
06 28 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,304,980/-

ராசி
ரூ. 4,285,740/-
திகதி 2022-07-24
வெற்றி வாரம் 3513
14 24 50 52
ரூ. 4,580,180/-

24 கப்பன
சீட்டிழுப்பு வாரம் 977
2022.07.24
I 16 04 37 44 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 249,458,035/-

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1627
சீட்டிழுப்பு திகதி : 2022.07.24
ரூ. 2,128,160/-
05 16 48 77 Z

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12223)

076 825 7716 (ஆகாஸ்)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (12245)


## 22 ஆவது...

இதனடிப்படையில் திருத்தச் சட்டத்தின் மீதான முதலாவது வாசிப்பின் பின்னர் திருத்தச் சட்டம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்படவில்லை என்றால், பாராளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டங்களுக்கு அமைய விவாதத்திற்கு எடுக்க முடியும்.

22 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அண்மையில் அமைச்சரவையில் அனுமதி கிடைத்தது. இதனையடுத்து திருத்தச் சட்டம் கடந்த ஜூன் 24 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது எனவும் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேவேளை 22ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

திருத்தச் சட்டத்தை பாராளுமன்ற நிகழ்ச்சி நிரல் புத்தகத்தில் உள்ளடக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார். (4-7)

## அடுத்த மாதம்...

அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக நிதியமைச்சு தரப்புகள் தெரிவித்துள்ளன.

எனினும் உரிய திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

தற்போதைய நெருக்கடியான உணவுப் பற்றாக்குறை மற்றும் வாழ்க்கைச் செலவுகளின் அடிப்படையில் நிதி அமைச்சு முந்தைய மொத்த செலவின மதிப்பீடான 3.6 டிரில்லியன் ரூபாயில் இருந்து திருத்த வரைபில் மொத்த செலவின மதிப்பீட்டை 4.6 டிரில்லியன் ரூபாயாக மாற்றியுள்ளது.

அதன்படி, 2022இல் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் அனைத்து செலவுகள் மற்றும் வருவாய் மதிப்பீடுகள் மாற்றப்படும். வரி மூலமான வருவாய், வரி அல்லாத வருவாய், மாகாண சபைகளின் வருவாய் மற்றும் மானியங்கள் உட்பட மொத்த வருவாய் 2.06 டிரில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. (4-7)


## காணி விற்பனைக்கு

**யாழ். நாவற்குழி சந்தியில் 78 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.

பார்வையிடும் நேரம்
காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(12199)

076 490 5403, 076 491 2493, 076 490 6029



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- யாழ். நகரத்தில் இருந்து 4 Km தூரத்தில் அமைந்துள்ளது
- 18 அடி பாதையுடன் 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- வீடுகள் அமைப்பதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் மற்றும் அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணிமுதல் மலை 6.00 மணிரை

ஜெயம்: தரகர் தேவையில்லை (12247)

077 814 7389, 077 241 7589


## மரண அறிவித்தல்



பிறப்பு 08 - 07 - 1986

இறப்பு 23 - 07 - 2022

### திருமதி ஹாசினி கோகுலவாசன்

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் லண்டன் ஒக்ஸ் பேட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஹாசினி கோகுலவாசன் அவர்கள் நேற்று முன்தினம் (23.07.2022) சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் (புங்குடுதீவு) சண்முகநாதன் - ஞானசௌந்தரி தம்பதியரின் அன்பு கனிஷ்ட புதல்வியும் மகேந்திரலிங்கம் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் கோகுலவாசனின் பாசமிகு மனைவியும் யஷ்வினியின் அன்புத் தாயாரும் கலாநிதி ஜயந்தினி (சிரேஷ்ட விரிவுரையாளர் - கிழக்குப் பல்கலைக் கழகம்), நதீஸ்வரன் (லண்டன்), பிரதீபன் (City Cycle - சாவகச்சேரி), ஹாயத்திரி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் புவேந்தினி துவாரகீசன் (அமெரிக்கா), Dr. விதுஷாயினி, துளசிதாசன், விக்னராஜன் (மலேசியா), ஹனுராதா (லண்டன்), டயானா ஆகியோரின் அன்பு மைத்துனியும் லிங்காஷ்டகியின் பாசமிகு சித்தியும் ஷார்வி (லண்டன்), பீமேஷ் (லண்டன்), சகானா, தனுஷிக், அதிரன் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறியத்தரப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தந்தை : 076 539 9936
மாமா : 021 222 9568
கணவர் : 0044 859990600
அண்ணன் : 0044 7414662294
அண்ணன் : 077 [illegible]

296A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
383/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(12250)
தகவல்: குடும்பத்தினர்


## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனமொன்றுக்கு பின்வரும் உத்தியோகத்தர் தேவை.

- **பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் (பெண்கள்)**

சிங்களத்தில் சரளமாக பேசக் கூடியவர்களுக்கு முன்னுரிமை

யாழ். நகரத்திலிருந்து 6 கிலோமீற்றர் தூரத்திற்குள் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

076 097 3121



**2022 A/L பரீட்சையை எதிர்கொள்ள இருக்கும் மாணவர்களிற்கான**

## A/L PHYSICS & CHEMISTRY

30 நாட்கள்

முழுமையான கருத்தரங்கு

- இடம் - NEW SCIENCE UNIVERSE No.52, Stanly Road, Jaffna.
- காலம் - August 01 இலிருந்து ஆரம்பமாகிறது
- நடைபெறும் நேரம் - காலை 7.00-9.00, 9.30-11.30

4 Hours 500/= only

முழுப் பாடங்களும் துரிதமான பூரண விளக்கத்துடன் கற்பிக்கப்பட்டு கடந்தகால வினாக்களும் செய்து விடப்படும்.

(முதல் 20 மாணவர்களிற்கு முதல் நாள் கருத்தரங்கானது இலவசம்)

(அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை. [illegible] அனுமதிகளை [illegible]த்தில் பெற்றுக்கொள்ளவும்.) (12239)

077 934 4697
Director of NSU


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.